இணைப்பு II

**Kid Naturalist 2024**

**ஆசிரியர்களுக்கான வழிகாட்டல்கள்**

**1. நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்கள்**

பரீட்சை சார்ந்த கல்வி முறையின் விளைவாக, பிள்ளைகள் தனியார் வகுப்புகளுக்கு அனுப்பப்படும் போக்கு அதிகரித்து வருகிறது, மேலும் பிள்ளைகள் வெளிப்புற நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் இயற்கையான சூழலுடன் பழகுவதற்கும் நேரம் வெகுவாகக் குறைந்து வருகிறது. மேலும், பிள்ளைகள் தொலைக்காட்சி, கணினிகள், கையடக்க தொலைபேசிகள் மற்றும் உயர் தொழில்நுட்ப கருவிகளை சார்ந்திருப்பது அவர்கள் வாழும் சூழலுடன் அவர்களின் ஈடுபாட்டை மேலும் குறைக்கிறது. ஆதலினால், பிள்ளைகள் இயற்கையோடு பழகுவதற்கும், அவர்கள் தமது வாழ்க்கைச் சூழலைப் பாராட்டி நேசிக்கும் மற்றும் மதிக்கும் பொறுப்புள்ள குடிமக்களாக மாறுவதற்கும் பயிற்சி அளிப்பது மிகவும் அவசியம் ஆகும். எனவே, அரசாங்கத்தில் தம்மை பதிவு செய்துக்கொண்ட நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் தரம் ஒன்று முதல் ஆறாம் வகுப்பு வரையிலான பிள்ளைகளுக்காக கல்வி அமைச்சின் அகப்பாட்டெல்லையின் கீழ் அடங்கும் தேசிய விஞ்ஞான மன்றத்தினால் ஆண்டுதோறும் இந்த Kid Naturalist நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

**2. பிள்ளைகள் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கு பெறுவது எவ்வாறு**

இந்தத் திட்டத்தின் அடிப்படைக் கருத்தானது, ஒரு பிள்ளை 6 வார காலத்திற்கு அவர்களின் வாழ்க்கைச் சூழலில் அல்லது அவர்களது பாடசாலையினை சுற்றியுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட சூழலில் நிகழும் இயற்கை நிகழ்வுகள்/உயிரினங்கள்/தாவரங்களை அவதானித்து பதிவுசெய்வதாகும். அவர்கள் தங்கள் அவதானிப்புகளைப் பதிவுசெய்து, அவதானிப்புகளின் அடிப்படையில் ”இயற்கை பற்றிய குறிப்பிதழ்” ஒன்றைத் தயாரிக்க வேண்டும். இந்த முழு நடவடிக்கைக்கும் 8 வார கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

*குறிப்பு: வீடுகளில் உள்ள செல்லப்பிராணிகள், விலங்குகள் மற்றும் பூச்செடிகள் போன்றவை இந்த ஆய்வின் நோக்கங்களை பூர்த்தி செய்யாததால், அவற்றினை இந்த பயிற்சியில் கண்காணிப்புப் பொருட்களாகப் பயன்படுத்துவது வன்மையாக கண்டிக்கப்படுகிறது.*

**3. மாணவர்களின் கருத்திட்டங்கள் தொடர்பில் சில உதாரணங்கள**

1. பிள்ளைகள் தங்கள் தோட்டத்திற்கு வரும் பறவைகளை அவதானிக்கலாம். ஏதேனும் ஒரு இனத்தைத் தேர்ந்தெடுத்து, அவற்றின் நடத்தை, அவற்றின் உணவுப் பழக்கம் (எடுத்துக்காட்டு, நிலத்தினை தோண்டி உணவு தேடுதல்,தாவரப் பொருட்களை தேடி உண்ணுதல் போன்றவை), உணவைத் தேடுவதற்கு அவர்களின் உடல் வடிவமைந்துள்ள விதம் (எடுத்துக்காட்டு, சொண்டு , கால், கழுத்து போன்றவை) கூட்டமாக வாழும் அவர்களது நடத்தை முறை (மந்தை, ஜோடி அல்லது தனிமையில் வாழ்வது போன்றவை) போன்றவற்றினை அவதானித்து பதிவு செய்யலாம். சுற்றுச்சூழலுக்கு இந்த விலங்குகளினால் ஏற்படக்கூடிய நன்மைகள் அல்லது தீங்குகள், சிறப்பு நடவடிக்கை முறைகள் மற்றும் அவற்றுக்கான தனிப்பட்ட நடத்தைகளைக் கண்டறிய பிள்ளைகளுக்கு வழிகாட்டவும்.

2. தோட்டத்திலோ அல்லது சுற்றியுள்ள பகுதிகளிலோ உள்ள சில மருத்துவ தாவரங்களை அடையாளம் காண பிள்ளைக்கு வழிகாட்டவும். பின்னர் அவை வளரும் சூழல், அதன் தன்மை, அது மரமாகவோ, செடியாகவோ, புதராகவோ அல்லது கொடியாகவோ இருக்கலாம். அதனை இனம் காணவும், அத்துடன் அவற்றில் பூக்கள்/காய்கள் விளையும் விதம், செடியை அடையாளம் காணகூடிய சிறப்பு அம்சங்கள், அதனை உணவுப் பொருளாகப் பயன்படுத்தப்பட முடியுமா என்பதை பதிவு செய்ய வழிகாட்டுங்கள். அது ஒரு சிறிய செடியாக இருந்தால், முழு செடியையும் உலர்த்தி ஒட்டவும்

அல்லது பெரிய தாவரமாக இருந்தால் செடியின் பாகங்களை பயன்படுத்தி herbarium தாள் (herbarium sheet)தயார் செய்யவும். இந்த தாவரத்தினை பற்றி மேலதிக தகவல்களினை(அதன் விஞ்ஞான ரீதியிலான பெயர், பொதுவான பெயர்கள்) புத்தகங்கள், பெரியவர்கள் அல்லது இணையத்தில் உள்ள நம்பகமான இணையதளங்களில் இருந்து பெற்றுக்கொள்ள பிள்ளைகளுக்கு உதவுங்கள்.மேலும் இந்த தாவரத்தின் மருத்துவ ரீதியிலான மதிப்பு, உணவு என்ற அடிப்படையில் அதன் மதிப்பு, அதன் சிறப்பு அம்சங்கள் மற்றும் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் அதன் மூலம் கிடைக்கும் நன்மைகளைக் கண்டறிந்து அவற்றைப் குறிப்பிதழில் எழுத உங்கள் மாணவருக்கு வழிகாட்டவும்.

3. தோட்டத்தில் ஒரு பூச்சியைத் தேர்ந்தெடுக்க பிள்ளைக்கு சிறிது நேரம் கொடுங்கள் (எடுத்துக்காட்டு,எறும்புகள், சிலந்திகள், வண்டுகள், பட்டாம்பூச்சிகள், ladybirds, அந்துப்பூச்சிகள் போன்றவை) அவற்றின் நடத்தையை கூர்ந்து அவதானிப்பதற்கும், கை வில்லையினை பயன்படுத்தவும் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கவும். எதிரிகளிடமிருந்து இயற்கையாக தம்மை பாதுகாத்துக் கொள்ள அவை எப்படித் தகவமைத்துக் கொள்கின்றன(உருமறைப்பு) - வண்ண வடிவங்கள், உடல் வடிவம் போன்ற இதர பல விடயங்கள் பற்றி அவதானிக்க கற்றுக்கொடுத்தல். அவை தமது வாழ்விடங்களை எவ்வாறு தயார் செய்கின்றன, அவற்றின் உணவுப் பழக்கவழக்கங்கள் போன்றவை. மற்றும் சுற்றுச்சூழலுக்கும் மக்களுக்கும் அவற்றினால் ஆற்றப்படும் நன்மைகள் அல்லது தீங்குகளைக் கண்டறிய மாணவர்களுக்கு வழிகாட்டுதல்

4. அணில், பல்லிகள், குரங்குகள் அல்லது கடமான்கள் போன்ற தோட்டத்திற்குச் வரும் விலங்குகளைக் கவனிப்பதற்கு பிள்ளைகளினை ஊக்குவிக்கவும். அவற்றின் நடத்தை, உணவுப் பழக்கம், தோற்றம் மற்றும் உருமறைப்பு நுட்பங்களைக் கவனிப்பதில் அவர்களுக்கு வழிகாட்டவும்.விரிவான ஆய்வினை முன்னெடுப்பதற்கு ஒரு விலங்கு மீது கவனம் செலுத்துங்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட விலங்கின் விஞ்ஞானவியல் பெயர், பொதுவான பெயர்கள் மற்றும் சுற்றுச்சூழல் தாக்கம் (நேர்மறை மற்றும் எதிர்மறை இரண்டும்) ஆகியவற்றை ஆராய்ச்சி செய்வதில் பிள்ளைக்கு உதவுங்கள். அவர்களின் கண்டுபிடிப்புகளை பதிவு செய்யுங்கள்.

5. பகலில் வானத்தில் மேகங்களின் வடிவத்தைப் ஆராய பிள்ளையினை வழிநடத்துங்கள். மழைக்கு முன் அல்லது பின் காலப்போக்கில் ஏற்படும் மாற்றங்களை பதிவு செய்ய பிள்ளைகளுக்கு வழிகாட்டவும். மேகம் வடிவங்கள் மற்றும் தொடர்புடைய தகவல்களைப் பற்றி பிள்ளைக்கு கற்பிக்க இணையம் அல்லது பிற தகவல் ஆதாரங்களைப் பயன்படுத்தவும். விசேஷ நாட்களில் (எடுத்துக்காட்டு மழை நாட்களில்) பயன்படுத்தப்படுவதைத் தவிர மற்ற நேரங்களில் கண்காணிப்பது சுற்றுச்சூழல் சாதனைக்கு மதிப்பைக் கூட்டுகிறது. மழைக்காலங்களில், வானத்தை அவதானித்து பெறப்படும் தரவுகள் கருத் திட்டத்தை பாதிக்கலாம் என்பதுடன் இயற்கை பற்றிய குறிப்பிதழை தயாரிப்பதற்கான தரவுகளினையும் பெற்றுக்கொள்ள இயலாது என்பதை நினைவில் கொள்ளவும்.

### 4. இயற்கை பற்றிய குறிப்பிதழை தயாரிப்பதற்கு ஒரு ஆசிரியர் எவ்வாறு பிள்ளைகளினை வழி நடத்தலாம்

1. விலங்கு/தாவரம்/அல்லது கவனிக்க வேண்டிய பிற பொருட்களைத் தேர்ந்தெடுக்க பிள்ளைக்கு உதவுதல்
2. முன் திட்டமிடல் (முறைகள் பயன்பாடு மற்றும் தேவையான பொருட்கள்) மற்றும் குறிப்பிட்ட தரவு சேகரிக்கப்பட்டு பதிவு செய்ய மாணவர்களுக்கு வழிகாட்டுதல்.
3. கண்காணிப்புக்கான நேர அட்டவணையை அமைக்கவும் (எடுத்துக்காட்டாக காலை 6 மணி, மாலை 4 மணி). சிறப்புச் விடயங்களினை பொறுத்து, மேலதிக நேரங்களிலும் மாணவர்களை அவதானிக்கச் சொல்லுதல்
4. திகதி மற்றும் நேரத்துடன் அவதானிப்புகள் பற்றிய குறிப்புகளை பேண பிள்ளையை வழிநடத்துதல்
5. அவதானிப்புகளைச் முன்னெடுக்கும் போது பிள்ளையின் பாதுகாப்பை எப்போதும் மனதில் கொள்ளுதல்
6. எழுதுவதில் சிரமங்களைக் காணும் பிள்ளைகளுக்கு அவர்களது அவதானிப்புகளை வெளிப்படுத்த வரைபடங்கள் மற்றும் படங்களை அதிகம் பயன்படுத்த வழிகாட்டல் .
7. மாணவர் முதல் ஆறு வாரங்களில் தொடர்புடைய பொருட்களை (காய்ந்த பூக்கள், இலைகள், விதைகள், பறவை இறகுகள், முதலியன) சேகரிக்கத் தொடங்குவதற்கு,மாணவர்களினை வழிநடத்துவதுடன்

அவற்றினை பயன்படுத்தி கவர்ச்சிகரமான பத்திரிகையை உருவாக்குவதற்காக அவற்றை ஒழுங்கமைக்க பிள்ளைகளுக்கு வழிகாட்டல்.

8. குறிப்பிதழை தயாரிக்கும் போது, வரைபடங்கள், உலர்ந்த பூ இலைகள், படங்கள் போன்ற பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி பிள்ளை தனது அவதானிப்புகளை சுதந்திரமாக முன்வைக்க அனுமதித்தல்.
9. கருத் திட்ட காலத்தில் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு புத்தகங்கள், இணையம் அல்லது தெரிந்த நபரிடமிருந்து தகவல்களைக் கண்டறிய மாணவர்களுக்கு வழிகாட்டுதல்.
10. பிள்ளை தமது சொந்த திறன்கள் மற்றும் திறமைகளைப் பயன்படுத்தி, ஒரு தனித்துவமான வழியில் இயற்கை பற்றிய குறிப்பிதழை உருவாக்க அதிகபட்ச சுதந்திரத்தையும் இடத்தையும் வழங்குதல் .
11. பிள்ளைகளினது எண்ணங்கள் அல்லது வெளிப்பாடுகளில் குறுக்கிடாது , மொழி, இலக்கணம் மற்றும் வார்த்தைகளை முடிந்தவரை துல்லியமாக பயன்படுத்த உதவுதல்
12. தேவையான இடங்களில் மட்டும் புகைப்படங்களைப் பயன்படுத்தவும். பிள்ளையின் படைப்பாற்றலுக்கு எப்போதும் முன்னுரிமை கொடுங்கள். பத்திரிகைகள், புத்தகங்கள், இணையம் போன்ற பிற ஆதாரங்களில் இருந்து எடுக்கப்பட்ட படங்களை குறிப்பிதழினை தயாரிக்கப் பயன்படுத்த வேண்டாம்.
13. தேசிய விஞ்ஞான மன்றத்தினால் வழங்கப்பட்ட இயற்கை பற்றிய குறிப்பிதழின் வடிவமைப்பை வழிகாட்டியாக மட்டுமே பயன்படுத்த வேண்டுமே தவிர பிள்ளைகளின் படைப்பாற்றலைத் தடுக்க கூடாது (இணைப்பு III).
14. தேசிய விஞ்ஞான மன்றமானது 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் kid naturalist நிகழ்ச்சித்திட்டத்தின் விரிவுரைத் தொடரை தொடங்குவதற்கான ஒழுங்கமைப்பினை செய்வதற்கு உள்ளது. இதைப் பற்றிய மேலதிக விபரங்களினை தேசிய விஞ்ஞான மன்றத்தின் அதிகாரப்பூர்வ you tube அலைவரிசை மற்றும் அதிகாரப்பூர்வ முகப்புத்தக பக்கத்துடன் இணைவதன் தன் மூலம் பெறலாம் (https://www.youtube.com/channel/UCWziS21LQ1L9xSDUZAKD5dw).

## 5. இயற்கை குறிப்பிதழை தயாரிக்கும் போது கவனத்தில் கொள்ளப்படவேண்டிய விடயங்கள்

1. இயற்கை பற்றிய குறிப்பிதழை தயாரிக்கும் போது அடிப்படை வழிகாட்டுதலாக தேசிய விஞ்ஞான மன்றம் வழங்கிய வடிவமைப்பைப் பயன்படுத்தவும்.
2. இயற்கை பற்றிய குறிப்பிதழானது பிள்ளையினது கையெழுத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். கணினி தட்டச்சு செய்யப்பட்ட இதழ் மதிப்பீட்டிற்கு ஏற்றுக்கொள்ளப்படாது. பிள்ளைக்கு நன்றாக எழுத முடியவில்லை எனின் , படங்களின் உதவியுடன் எண்ணக்கருத்துக்களினை வெளிப்படுத்தலாம்.
3. பொருத்தமான வண்ணங்கள் அதாவது பஸ்டேல் வாட்டர் கலர்கள்(pastel, watercolors) வண்ண பென்சில்கள் போன்றவை வரைபடங்களில் பயன்படுத்தப்படலாம்.
4. அறிக்கையிடலில் பெரியவர்கள் பயன்படுத்தும் உயர் தொழில்நுட்ப, விஞ்ஞான சொற்கள் அல்லது மொழியைப் பயன்படுத்துமாறு பிள்ளைகளினை வழிநடத்துவதைத் தவிர்க்கவும். பிள்ளைகள் தங்கள் சொந்த வார்த்தைகளைப் பயன்படுத்தி இதழை எழுதட்டும்.
5. அறிவுறுத்தல் காகிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டவாறு இயற்கை பற்றிய குறிப்பிதழில் பக்கங்களைச் சேர்க்கவும். மதிப்பீட்டின் போது தளர்வான காகிதங்கள் அல்லது ஒழுங்கற்ற முறையில் சேகரிக்கப்பட்ட காகிதங்கள் ஒரு பத்திரிகையாக கருதப்பட மாட்டாது .
6. விலையுயர்ந்த காகிதம் அல்லது எழுதுபொருட்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். பத்திரிக்கையை தயாரிப்பதற்கு வெற்று காகிதத்தை (வெள்ளை அல்லது நிறம்) பயன்படுத்தவும்.

## 6.நிகழ்ச்சித் திட்டத்தில் பதிவு செய்தல்

நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்க விரும்பும் மாணவர்கள் 2024, ஜூலை 15 க்கு முன் கூகுள் படிவத்தைப் பயன்படுத்தி விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து பதிவு செய்யலாம்.

கூகுள் படிவத்திற்கான QR குறியீடு

7.**இயற்கை பற்றிய குறிப்பிதழினை சமர்ப்பித்தல்**

விண்ணப்பப் படிவத்தை பின்வரும் இணைப்பைப் பயன்படுத்தி தேசிய விஞ்ஞான மன்றத்தின் அதிகாரப்பூர்வ வலைத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.
https://www.nsf.gov.lk/images/2024/Kid_Naturalist_SIN.pdf

தலைமையாசிரியரின் அத்தாட்சிபடுத்தலுடன் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பபடிவம் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய விஞ்ஞான மன்றம்**
**47/5, மெய்ட்லன்ட் பிளேஸ்**
**கொழும்பு 07**

**குறிப்பு:**

இயற்கை பற்றிய குறிப்பிதழினை சமர்ப்பிப்பதற்கான முடிவுத்திகதி : 2024, ஆகஸ்ட் 31
தேசிய விஞ்ஞான மன்றத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் (( www.nsf.gov.lk) போட்டியில் வெற்றி பெற்றவர்களது விபரங்கள் அறிவிக்கப்பட்ட பின்பு இரண்டு மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட்ட இயற்கை பற்றிய குறிப்பிதழினை பொது வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை தேசிய விஞ்ஞான மன்ற வளாகத்தில் பெற்றுக்கொள்ளலாம்
.

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்க:**
திருவதி அஜந்தா/ திருவதி சாமரிகா
தொலைபேசி: 0112696771
இணைப்பிலக்கம்; : 185